மேலும் இலவச பிரதிநிதிகளுக்கும்,
இலவச பத்திரிக்கை பிரதிநிதிகளுக்கும்,
எங்களை தொடர்பு கொள்ளுங்கள்





இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.


ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :

**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk


# புது சிருஷ்டி

சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்


இதழ் 10

- இரக்கமுள்ளவர்களாயிருங்கள் !
- கல்லுகள் கூப்பிடும்
- வாழ்க்கைக்காக கல்வி கற்கிறோமா ?
- "தேவனிடம் திரும்புதல்"

### கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info
http// www.choose2live.info/
இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.
ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

**புது சிருஷ்டி பதிப்பாளர் குழு**

லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்

ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்

பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்

திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ் மற்றும் சந்திர மோகன் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# விக்லிஃப்பும் வேதாகமும்

திருச்சபை பயன்படுத்திய வேதாகமம் லத்தீன்மொழியில் இருந்தது. ஆகவே முழு தேசத்திற்கும் அது முத்திரையிட்டு மூடப்பட்ட புத்தகமாகவே இருந்தது. சுவிசேஷங்கள் மற்றும் வேதவாக்கியங்களின் சில பகுதிகள் சாக்ஸன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தாலும், முழு வேதாகமம் மத போதகர்களால் மட்டுமே படிக்கக் கூடியதாயிருந்தது. அடுத்த நூற்றாண்டில் தான் அச்சு இயந்திரம் கண்டுப்பிடிக்கப்பட்டது. ஆனால் விக்லிஃப் எழுதிய வேதாகமத்தின் பிரதிகள் மீண்டும் பிரதி எடுக்கப்பட்டது. அவர் காலத்தில் மக்கள் படிப்பதற்கென சுற்றுக்கு விடப்பட்டது.

இதற்குமுன் வேதத்தின் உண்மையும், அதன் அர்த்தமும், என்றொரு நூலை அவர் எழுதியிருந்தார். அதில், மதசம்பந்தமான அனைத்துக் கோட்பாடுகளுக்கும் வேதாகமம் தான் ஒரே வழிகாட்டி எனவும் திருச்சபையின் பாரம்பரியங்களைத் தள்ளி வேதாகமத்தையே பின்பற்ற வேண்டுமென்றும், அதைப்படிக்கவும், நிதானிக்கவும், ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டென்றும் கூறியிருந்தார். அது மதபோதகர்களுக்கு மட்டுமே உரித்தான புத்தகமல்ல. அனைத்து மக்களுக்கும் உரியதெனவும் தனிப்பட்ட ஒரு மக்கள் கூட்டத்திற்கு மட்டுமென்றில்லாமல், முழு உலகத்திற்குமே உரியதென்றார். தூய வேதத்தின் பக்கங்களில் 'அனைத்தும் சத்தியமும் எழுதப்பட்டுள்ளது அல்லது மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாம் போப்புகளையும் கர்தினால்களையும் பின்பற்றுவதை விட, தேவனுடைய பிரமாணத்தையும் பகுத்தறிவையும் பின்பற்ற வேண்டும். நூறு போப்புகள் இருந்தாலும் மத போதகர்களெல்லாருமே கர்தினால்களாக இருந்தாலும், இவர்களுக்குத் தலை வணங்குவதைக் காட்டிலும் சுவிசேஷம் கூறும் கற்பனைகளைத் தான் நாம் பின்பற்ற வேண்டும் என விக்லிஃப் கூறினார்.

கர்த்தருடைய இராப்போஜன ஆராதனையின் போது சாக்கிரமெந்துகளாகிய அப்பமும் திராட்சரசமும் அற்புதமான விதமாக இரட்சகரின் சரீரமாகவும் இரத்தமாகவும் மாறுகிறது எனும் கோட்பாட்டை எதிர்த்து விக்லிஃப் உரையாற்றினார். அவரின் இத்தகைய சொற்பொழிவுகளால் அவருக்கு விரோதமாக ஒரு பெரும்புயலே எழும்பியது எனலாம். ஆகவே அவர் கூறியதினின்று பின்வாங்குமாறு வற்புறுத்தப்பட்டார். லுட்டர்ஓர்த் குருவாகப் பணியாற்றும் பொறுப்பும் அவரிடமிருந்து பறிக்கப்பட்டது. அதன்பின் தூய மனதும் வீரமும் நிறைந்த நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் அவர் கூறிய கருத்துக்களுக்காக எரித்துக் கொல்லப்பட்டார்கள்.

விக்லிஃப், அவர் காலத்து மக்களில் குறிப்பிடத் தக்க மாமனிதர் ஆவார். அவர் காலத்தில் வலிமை படைத்த உள்ளம் கொண்ட மக்களும் கிளர்ச்சி யூட்டும் செயல்களும் 'சீர்திருத்தம்' எனும் மாபெரும் பணிக்கென ஆயத்தமாக்கப்பட்டன. விக்லிஃப் இறந்து 30 ஆண்டுகள் ஆனபின்னும், ரோம சபை அவரின் எலும்புகளைத் தோண்டியெடுத்து, மதத்துரோகி எனப் பட்டம் கட்டி எரித்து, சாம்பலை 'அவான்' நதியில் கலக்கும் ஒரு சிறிய ஓடையில் தூவினார்கள். இச்செயலின் மூலம் அவர் மேல் தங்களுக்கிருந்த கசப்பை வெளிப்படுத்தி, வஞ்சம் தீர்த்துக்கொண்டார்கள்.

# சுவாசம்

சுவாசித்தல் : ஒருமுறை உள்மூச்சும் வெளிமூச்சும் சேர்ந்தது ஒரு சுவாசித்தல். அகராதியின் விளக்கம் இது.

இயற்கைமான பல்வேறு வேலைகளில் போல, சுவாசித்தலிலும் நாம் படிப்பதற்கான ஒரு பாடத்தை தேவன் வைத்திருக்கிறார். இத்தொடர் நிகழ்ச்சி எவ்வளவு ‘இயற்கையாய்’ இருக்கிறதென்றால், அதைக்குறித்து நம்மை நினைக்கவைக்கும் அளவிற்கு நமக்குப் பிரச்சனைகள் இருந்தால் தவிர, நாம் சுவாசத்தைப் பற்றி நினைப்பதே இல்லை. ஆஸ்த்மா அல்லது இளைப்பு நோய் இருக்கும் யாரிடமானாலும் சுவாசித்தலைப் பற்றிக்கேளுங்கள் அதைப்பற்றிய அவர்களது கண்ணோட்டம் அதைப்பற்றி சற்று சிந்திக்காத நமது கண்ணோட்டத்தை விட வித்தியாசமாய் இருக்கும். இருப்பினும் நம்மை இவ்விதமாய் இயங்கும்படி தேவன் வைத்திருக்கிறார். ஆகவே சுவாசித்தல் எனும் நம் உடல் இயக்கத்தின் மூலம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் உண்டு.



உள்மூச்சு என்பது நம் நுரையீரல்களுக்குள், உயிரைக் காக்கும் ஆக்ஸிஜன் நிரம்பிய மூச்சை உள் இழுப்பது, வெளிமூச்சு என்பது வெளியேற்றப்படும் கழிவுக்காற்று. உயிரினம் தொடர்ந்து உயிரோடிருப்பதற்கு இந்த சுழற்சி திரும்பத் திரும்ப நடைபெற்றுக்கொண்டே இருக்கவேண்டும். சுவாசித்தல் வெளிமூச்சோடு நின்றுவிடுமானால் உயிரினமும் இறந்து விடுகிறது. உயிரினம் ஆரோக்கியமாக இருந்தால், இந்தத் தொடர் நிகழ்ச்சி தானாக நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. இது நிகழ்வதற்கு அதிகமான யோசனையெல்லாம் தேவையில்லை. நாம் என்ன வாயுக்களை உள்மூச்சாக எடுத்துக்கொள்கிறோம் என்பதும் முக்கியம். ஆக்ஸிஜன் இல்லாவிடில் ஆக்ஸிஜனோடு விஷ வாயுக்கள் தவறான விகிதத்தில் கலந்திருந்தால் மரணம் நேரிடலாம்.

## தேவன் சுவாசித்தளித்த வார்த்தை

‘வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது’ என பவுல் 2 *தீமோத்தேயு* 2:16ல் கூறுகிறார். கிரேக்க வார்த்தை ‘தேவன் சுவாசித்தார்’ எனப்பொருள் கொள்கிறது. இதிலிருந்து, தேவனைப் பொறுத்த மட்டில், வெளிமூச்சு



தான் - தேவனிடமிருந்து என்ன வெளியே செல்கிறதோ அதுதான் மனிதனுக்கு ஜீவனைக் கொடுக்கிறது - சரீரப் பிரகாரமாக உயிரையும், ஆவிக்குரிய பிரகாரமாக அவரின் வார்த்தையால் ஜீவனையும் கொடுப்பதோடு அதைக்காக்கிறது. ஆகவே பழங்காலத்திய தீர்க்கதரிசிகள் தேவனுடைய வெளி சுவாசத்தினால் ஏவப்பட்டு, தேவன் எதை சுவாசித்து வெளிவிட்டாரோ, அவைகளை எழுத்தில் எழுதினார்கள். அதுவே அவருடைய வார்த்தை, அவருடைய சத்தம், வார்த்தையாய் தந்த அவரின் நினைவுகளும் நோக்கங்களும்.

மரிக்கும் தருவாயில் உள்ள ஒருவன் வாயில் இன்னொருவர் தன் வாயை வைத்து சுவாசித்து அவனை உயிர் பிழைக்கச் செய்யும் முறையை அறிவோம். ‘தேவன் ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே



...வானான்’. (*ஆதியாகமம்* 2:7) என தேவன்
...ம் உயிரற்றுக் கிடந்தான் என்று பார்க்கிறோம்.
...37ம் அதிகாரத்தில் எசேக்கியேல் உலர்ந்த
...ரப்பதில் காண்கிறோம். இன்னும் ஆச்சரியமான
...ாலையில் மரித்த குமாரனின் உயிரற்ற உடலில்
அவரை உயிரோடெழுப்பினார். பழைய மனிதன்
...னுஷனுக்கு உயிர் கொடுக்கப்படுவதால், நாம்
...ம் (ரோமர் 6) தேவன் நம்மைக் கிறிஸ்துவுடனே

...க வாழவேண்டுமாயின் அடிக்கடி ‘தேவனுடைய
...க் கொண்டே இருக்கவேண்டும். அவருடைய
...தி. உடலில் உயிர் தொடர்ந்து இருப்பதற்கு
...ல், அடிக்கடி அதை உள்மூச்சாக இழுத்துக் கொள்ள வேண்டியது போல் தேவனுடைய சுவாசம் அதாவது வார்த்தையை உள்மூச்சுபோல் உள்வாங்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில் தேவனுடைய வார்த்தை எனும் சுவாசம் ஆவிக்குரிய ஜீவனை நமக்குக் கொடுக்கிறது. ‘மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு

வார்த்தையினாலும் பிழைப்பான்' (*உபாகமம்* 8:3). இதை இப்பொழுது நாம் செய்தால் தேவனுடைய சுவாசம் / ஆவி நம்மை வருங்காலத்தில் நித்தியமாய் நம்மைத் தாங்கி பலப்படுத்தும்.

**வெளி சுவாசம்**

வெளி சுவாசம் சத்தத்தை உண்டுபண்ணுகிறது. இது உள் சுவாசத்தைச் சார்ந்திருக்கிறது. ஏனெனில் ஏராளமான காற்று குரல்வளை மூடியை இயங்க வைக்கிறது. (உள்சுவாசத்தின் போது அவை வேலை செய்யுமென்றாலும், பயன்தரும் வகையில் அல்ல.) குரல் என்பது, பேசுபவரை நாம் பார்க்கா விடினும் குரல் கேட்கக் கூடியது. அந்தந்த நபருக்கென தனிக்குரல் இருக்கிறது. ஒருவர் இருக்கிறார் என்பதைக் காட்டுவது அவரது குரல். அதே மாதிரி தான் தேவனும் - அவர் நம்மிடம் தமது படைப்பின் / இயற்கையின் மூலம் பேசுகிறார். *(சங்கீதம் 19:1-4),* அவருடைய குமாரனின் மூலம் (*யோவான் 1:4; 14:24)* மற்றும் வேதவாக்கியங்களின் மூலம் *(சங்கீதம். 19:7,8; 2 தீமோத்தேயு 3:16)*

படுவதற்கு சுவாசம் உள் மூச்சு, வெளி மூச்சு இரண்டையும் நன்றாகப் பயன்படுத்தி நல்ல சப்தத்தை எழுப்பவேண்டும். தேவனுடைய குமாரரும் குமாரர்த்திகளுமான நம்மிடம் கேட்கப்படுவது' 'அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலி' *(எபிரேயர் 13:15)* சரியான, ஜீவன் தரும் சுவாசமாகிய தேவனுடைய வார்த்தையை உள் சுவாசத்தால், நாம் பாட்டாக வெளிச்சுவாசிக்கும் போது அது அவருடைய நாமத்துக்குத் துதியாக இருக்கும். வேறு காரியங்களிலிருந்து உள்மூச்சு வருமானால் நம் உதடுகளில் இனி தேவனுக்குத் துதியும் மகிமையுமாய் இருக்காது' அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். *(மத்தேயு 7:16)*

ஆகவே, நாம் கற்றுக்கொள்ள வேண்டியது என்னவென்றால், சரீரத்தில் உயிரோடிருக்க சுவாசம் அவசியமானது போல் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு தேவனுடைய காரியங்கள் மிகவும் தேவை. ஜீவனுக்கு ஊற்றாகிய ஆக்ஸிஜனைத்தான் (மற்ற வாயுக்களையல்ல). நாம் உள் மூச்சாக எடுத்துக்கொள்கிறோம் என்று சோதித்துக் கொள்வோம். தேவன் வெளி மூச்சாக விட்டதை நாம் உள் மூச்சாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது நம் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு எவ்வளவு முக்கியமானது என நாம் உண்மையாக விளங்கிக் கொள்ள வேண்டும். அது இப்பொழுதும் வருங்காலத்தில் ராஜ்யத்தில் வாழும் போதும் அத்தியாவசியம். வாயோடு வாய் வைத்து சுவாசம் கொடுப்பது போல மரணத்தின் வாயில் இருக்கும் நமக்குள் தேவன் தம் வெளிமூச்சை விடட்டும். இறக்கும் நிலையிலுள்ள மனிதன் தானே சுவாசிக்க ஆரம்பித்தாலொழிய ஒரு பயனுமில்லை. நாம் தான் தெரிந்துக்கொள்ளவேண்டும்.


"என் கன் மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமூகத்தில் பிரீதியாயிருப்பதாக" *(சங்கீதம் 19:14)* - **உவெண்டி ஜான்சன்**



# நல்ல சமாரியன்

## எனக்குப் பிறன் யார் ? (லூக்கா 10:29)

நியாயசாஸ்திரி ஒருவனால் எழுப்பப்பட்ட நெருக்கடியான ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் விதமாக நல்ல சமாரியன் உவமை கொடுக்கப்பட்டது. இந்தக் கேள்விக்கான விடையை உவமையின் மையப்பகுதி சுட்டிக்காட்டுகிறது. கேள்வி என்னவென்றால், "நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்பது. நியாய சாஸ்திரி ஒரு அடிப்படைக் கொள்கையைத் தேடிக் கொண்டிருந்தான். அதாவது இரட்சிப்புக்கு முக்கியமும் அவசியமுமான ஓர் கருத்து, ஒரு விதி அல்லது கட்டளை. நமது இரட்சிப்புக்கும் இது முக்கியமும் அவசியமுமானதாக இருப்பதால், இந்த இளைஞனுக்கு அளிக்கப்பட்ட பதிலை நாமும் விரும்புவது அவசியம்.



**தனது கேள்விக்கு நியாசாஸ்திரியே பதிலளிப்பான்.**

இப்பொழுது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இளம் நியாயசாஸ்திரி சிந்தித்து, இந்தக் கேள்விக்கான பதிலைத் தன் மனசாட்சியின் ஆழத்திலிருந்து தேடிக் கண்டுபிடிக்கும்படி எதிர்பார்த்தார். இது ஒரு மிகச் சிறந்த ஓர் போதனா முறை. நற்செய்தியைப் பிரசங்கிப்பதானாலும், ஓய்வுநாள் பள்ளியில் அல்லது வேதாகம வகுப்புகளில் போதிப்பதானாலும் சரி, இது ஒரு சிறந்த போதனா முறை. இதில் அதிக பயனுண்டு. கடைசியில் தன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அறிக்கையிட வைத்த பதிலை நியாயசாஸ்திரி எப்படி மறுக்க முடியும்? நியாயசாஸ்திரிக்கானாலும் சரி, நமக்கானாலும் சரி இயேசு கேள்விக்கு நேரடியாக பதிலளிப்பதில்லை. நாமும் இந்த உவமையை கவனமாய்க் கேட்டு, இயேசுவினால் வழிநடத்தப்பட்டு பதிலைப் பெறவேண்டும். மேலும் "நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு" நாம் கற்றுக்கொண்ட கொள்கையை, நம் நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும்.

“நியாயப்பிரமாணத்தில் என்ன எழுதியிருக்கிறது?” *(லூக்கா 10:26)* என இயேசு இளம் நியாயசாஸ்திரியையே கேட்கிறார். அவன் வாழ்க்கைப் பணியே நியாயம் சொல்வதாகையால், மோசேயின் நியாயப்பிரமாணத்தை நன்கு அறிந்தவன் என்பதில் சந்தேகமில்லை.

**பிறன் யார்?**

பதில் சுருக்கமாகக் கொடுக்கப்படுகிறது, ஆனால் அது பத்து கற்பனைகள் அனைத்தையும் உள்ளடக்கியது. ஆகவே இயேசு அந்த பதிலுக்கு ஆதரவளிக்கிறார். இருப்பினும், இந்த பதில் நியாயசாஸ்திரியைத் திருப்திப்படுத்த வில்லை. அவன் தன்னை நீதிமான் என்று காண்பிக்க மனதாயிருந்தான்.

இந்தப் பதிலைக் குறித்து நான் வெகுகாலம் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தேன். அவன் தந்த முதல் பதிலுக்கு மேலொப்பம் அளிப்பது போல் இயேசு அங்கீகாரம் அளித்ததில் அவன் ஏன் திருப்தியடையவில்லை? அதோடு அவன் மேலும் விவாதிக்காமல் தன் வழியே போயிருந்திருக்கலாமே.

காரணம், நியாயப்பிரமாணத்திலிருந்து அவன் எடுத்துக் கொடுத்த பதில் அந்த தனிப்பட்ட இளைஞனுக்கு மட்டுமென்றில்லாமல் பொதுவானதாயிருந்தது. ‘பிறன்’ என்ற வார்த்தைக்கு யூத ரபிகளின் பாரம்பரியங்களுள் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. “எனக்குப் பிறன் யார்?” என்ற கேள்விக்கு எந்த அளவிற்கு விவரமறிந்தவராயிருக்கிறார் என்று அவன் இயேசுவை சோதித்தறிய விரும்பினான் எனலாம். ரோம ராணுவ வீரர்களையும் ஆட்சி செய்யும் அதிகாரிகளையும் இயேசு பிறனாகக் கருதமாட்டார் என எண்ணினான் போலும்.

மற்ற சந்தர்ப்பங்களைப் போலவே தனி மனிதனுக்கானதாகவும் அரசியல் ரீதியாகவும் கேள்வி இருந்தது. ரோமர்களை தயவு காட்டக்கூடிய பிறனாக இயேசு கருத்து கூறினால் அவர் யூத மக்களின் பார்வையில் மதிப்பிழந்து விடுவார். அப்படி அவர் சொல்லவில்லையென்றால் ரோமர்களின் வெறுப்பை சம்பாதிப்பதோடு, கலகம் மூள்வதற்கு அதுவே போதுமானதாயிருக்கும். இன்னொரு சமயத்தில் வரிகொடுப்பதைப் பற்றி இதே போன்றதொரு கேள்வி தான் கேட்கப்பட்டது. அப்பொழுதும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து முற்றிலும் எதிர்பாராத பதிலையே அளித்தார். இங்கு ரோமர்களல்ல சமாரியர்களைக் கருத்தில் கொண்டு பதிலளிக்கிறார். இந்த உவமையின் அர்த்தத்தை நாம் சரியாக அறிந்து கொள்ளுமுன் நாம் சற்று பின்னோக்கிச் சென்று யார் இந்த சமாரியர்கள் என நினைவிற்குக் கொண்டுவர வேண்டும்.

**சமாரியரின் பின்னணி**

கி.மு. 721ல் சர்கானிலிருந்து (669-626 கி.மு.) அசுர்பானிபால் வரையுள்ள அசீரிய அரசர்கள் வடதிசை இஸ்ரேல் ராஜ்யத்தை ஜனங்களால் நிரப்ப வேற்று நாட்டவரை அங்குகொண்டு வந்து குடியேற்றினார்கள். இது வடதிசையிலுள்ள பத்து கோத்திரங்களும் சிறைப்பட்டுப் போன பின் நடந்தது. *(2. இராஜாக்கள் 17:24,25)* எல்லா இஸ்ரவேலரும் நாடு கடத்தப்படவில்லை. ஆகவே குடியேறிய வேற்று நாட்டவர் மெதுவாக, மீதியிருந்த இஸ்ரவேலரோடு கலந்து திருமணம் செய்து கொண்டார்கள். ஆகக் கடைசியில் அசீரியர்கள் ஒரு சிறைப்பிடிக்கப்பட்ட ஆசாரியனை அனுப்பினார்கள். அவன் யெரொபேயாமால் அமர்த்தப்பட்ட மெய்விசுவாசமற்ற யாஹ்வே வணக்கத்தார்களில் ஒருவன்.

ஆகவே சமாரிய மக்கள் பல ஜாதியினர் சேர்ந்த ஒரு கலப்பின மக்கள். மோசேயின் ஐந்து ஆகமங்களை மட்டுமே சரியானவை என்பார்கள். பழைய ஏற்பாட்டின் மீதிப் பகுதிகள் மெய்யான தேவ வார்த்தையோடு சேர்க்கப்பட்டவை என்றார்கள். எருசலேம் தேவாலயத்தை அவர்கள் மதிப்பதில்லை. அதற்குப் பதில் கெரிசீம் மலையில் இன்னொரு இடத்தை பரிசுத்த ஸ்தலமாகக் கொண்டு பலியிட்டு வந்தார்கள் *(சிலநூறு சமாரியர்கள் இன்றும் அதே போல் செய்து வருகிறார்கள்).*

எஸ்றாவும் நெகேமியாவும் எருசலேம் தேவாலயத்தைத் திரும்பக் கட்டுவதில் சமாரியர்களும் பங்கு கொள்வதைத் தடுத்துவிட்டார்கள். பின்னர், அந்நிய வாழ்க்கைத் துணைகளை விட்டுவிட வேண்டுமென்ற கட்டளையில் அவர்களையும் சேர்த்துக் கொண்டார்கள்.

கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் யூத ஜெப ஆலயங்களில் பலர் முன்னிலையில் சமாரியனை சபித்தார்கள். யூதர்களின் நியாய ஸ்தலங்களில் சமாரியனை சாட்சியாக சேர்த்துக் கொள்ளக்கூடாது. அவனை மத மாற்றம் செய்து யூதனாக்க முடியாது. அவன் நித்திய ஜீவனுக்குப் புறம்பானவன் என்றே யூதர் கருதினர். புறமத வணக்கமெல்லாம் கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் சமாரியரிடம் மறைந்து விட்டது. *(அதே போல் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பிய பிறகு யூத மார்க்கத்திலும் புறஜாதி மார்க்கம் மறைந்துவிட்டது).*

சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், ஒரு சமயம் இயேசுவை சமாரியன் என்றும் பிசாசு என்றும் குற்றம் சாட்டினார்கள் *(யோவான் 8:48).* அவர்மேல் ஒரு சாபமாக அவருடைய எதிரிகள் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்தினர். தான் ஒரு பிசாசு அல்ல என இயேசு தெளிவாக மறுத்த போதிலும், சமாரியன் என்று தான் அழைக்கப்படுவதைப் பொருட்படுத்தவில்லை *(யோவான் 8:49).* புறஜாதியாரிடத்திற்குத் தான் அனுப்பப்படவில்லை என்று கூறினாலும், இயேசு சில சமாரியரோடு நேரடித் தொடர்பு வைத்திருந்தார். ஆகவே நாம் சமாரியரையும் புறஜாதியாரையும் ஒரே மாதிரி பார்க்க முடியாது. அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்தான் புறஜாதியாருக்குக் கதவு திறக்கப்படுகிறது. இயேசு பத்து குஷ்டரோகிகளை சுகமாக்கிய பொழுது *(லூக்கா 17:12-16).* ஒரு சமாரியன் தான் நன்றி சொல்வதற்கெனத் திரும்பி வந்தான் எனக் கூறப்பட்டுள்ளது. இப்படி இயேசு தமது சுகமாக்கும் அற்புதங்களைத் தரும் தமது தெய்வீக வல்லமையை சமாரியருக்கு விலக்கி வைக்கவில்லை. சமாரியப் பெண்ணுக்கு அவர் சுவிசேஷ நற்செய்தியைப் பிரசங்கித்தார் - சொல்லப் போனால், இயேசு வேண்டுமென்றே சமாரியாவுக்குச் சென்றார். “அவர் சமாரியா நாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தபடியால்” *(யோவான் 4:4-9).* இந்தப் பின்னணியத்தில்

இந்த உவமைக்குப் பொருள் கூறுவது எளிதாகிவிடுகிறது. சமாரியனைத் தேர்ந்தெடுத்தது மிகச்சரியானதே அந்த நியாயசாஸ்திரியின் மாய்மாலத்தை வெளிக்கொண்டுவர சொல்லப்பட்டது.. அருவறுக்கப்பட்ட சமாரியனே எல்லா மரியாதைக்கும் அன்புக்கும் தகுதியானவன் எனில், யார் தான் புறக்கணிக்கப்பட முடியும்?

## தேவையில் ஒருவன்

ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போனான். அவன் யூதன் தான் என்பது தெளிவாயில்லை. அவனது பிறப்பைக் குறித்து இயேசு ஒன்றும் சொல்லவில்லை. கொள்ளையாடப்படும் போது, அடித்து, சிதைத்து, இரத்தம் வழியச் செய்திருக்கும் போது, அவனை இனங் கண்டு கொள்வது கடினம். ஒருவனுக்கு உதவி செய்யத் தீர்மானம செய்வது, அவன் யார் என்பதைப் பொறுத்ததல்ல. தேவையைப் பொறுத்தது. யாருக்கு உதவி செய்வது யாரைப் புறக்கணிப்பது, நமக்கு அந்த மனுஷனைத் தெரியுமா? தெரியாதா? என்று யோசித்தா உதவி செய்கிறோம்?

## தவிர்க்கப்பட்ட ஈடுபாடு

முதலில் கடினமான அந்த ரோமப் பாதையிலே ஒரு ஆசாரியன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போனான். 24 மைல் நீளமுள்ள கரடுமுரடான அந்தப் பாதையில் கள்ளர்கள் மறைந்து கொள்ள வசதி இருந்தது. பொதுவாக, ஆசாரியர்கள் எருசலேம் தேவாலயத்தில் ஆராதனை நடத்தும் பொறுப்பேற்றவர்கள். தேவனுடைய வார்த்தை அவர்களுக்கே உரியது என எழுதப்பட்டுள்ளது. இப்படி ஆசாரியனாய் இருப்பவருக்கு ஜெப ஆலயங்களில் போதகர்களாய் இருக்கும் சாதாரண ரபிகளை விட அதிக பொறுப்பு உண்டு.

அடுத்து ஒரு லேவியன் வந்தான். அவர்கள் ஆலயத்தில் ஆசாரியனுக்கு உதவும் பொறுப்பில் உள்ளவர்கள். முதல் பரிசுத்த மனிதனைப் போலவே, இந்த லேவியனும் சந்தர்ப்பத்தை புறக்கணித்தான். கொள்ளையடிக்கப்பட்ட அந்த மனிதன் விஷயத்தில் லேவியன் ஈடுபட மறுத்ததால், சாலையோரத்தில் வேதனை அனுபவிக்க விடப்பட்டான். லேவியன் தாழ்ந்த நிலையில் இருந்தாலும் கூட நசுக்கப்பட்ட மக்கள் மீது அவனுக்குக் கருணை ஏற்படவில்லை. மாறாக, தனக்கு மேல் நிலையிலுள்ள ஆசாரியனின் முன்மாதிரியையே பின்பற்றினான். சரியான செயல் பின்பற்றப்படும்போது அது எடுத்துக்காட்டான குணமாகிறது. ஆனால் தவறான செயல் பின்பற்றப்படும்போது அது அழிவுக்கேதுவானதாகிறது. அவனவன் தன்னுடைய சொந்த செயல்களுக்குக் கணக்குக் கொடுக்கும்படி தேவன் செய்வார். குருடருக்கு வழி காட்டும் குருடரான தலைவர்கள் இருவரும் குழியில் விழத்தக்கதாக வழிகாட்டுவார்கள். இளம் சகோதரர்கள் மேல் தேவனுடைய வார்த்தையை நன்கு சோதித்தறிந்து தலைவர்களைப் பின்பற்றும் பொறுப்பு விழுகிறது. குருட்டுத்தனமாக பெரியவர்களைப் பின்பற்றுவதல்ல. பெரியவர்கள் சரியானபடி வழிநடத்த வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது என்பதை இச்சம்பவம் காட்டுகிறது.



ஒருவருக்கு உதவுவதில் ஆபத்து இருப்பதை மனிதன் காணும்போது, வேதனையிலிருப்பவர்களை கவனிக்காமல் விட்டுவிடுவது துக்ககரமான சந்தர்ப்பமாகும். அதனால் தான் நாஜிக்கள் யூதர்களை ஒட்டுமொத்தமாக அழிக்கும் போது, பராமுகமாக இருந்துவிட்டார்கள். 1960களில் நியுயார்க்கில் ஒரு பயங்கரமான கொலை நடந்துகொண்டிருந்தபொழுது நேரில் பார்த்த 38 சாட்சிகள் காவல்துறைக்குச் சொல்லத் தவறிவிட்டனர். இதனால் தான் நாமும்கூட சில சமயங்களில் நம் சமுதாயத்தில் தவறான காரியம் நடக்க அனுமதிக்கிறோம். ஏனென்றால் ஏதாவது ஒன்றில் நாம் தலையிட்டால் வரக்கூடிய கஷ்டம் அல்லது பிரச்சினை குறித்து பயப்படுகிறோம்.

## பழக்கத்திலுள்ள முதல் கொள்கை

கடைசியில் வெறுத்தொதுக்கப்பட்ட சாமரியன் அங்கு வந்து மனதுருக்கம் காட்டுகிறான். “வேறே எந்தக் கற்பனையும் உன்னிடத்தில் நீ அன்பு கூறுகிறது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது” *(ரோமர் 13:9)* என பவுல் அப்போஸ்தலனும் கூறுகிறார். ஆகவே இந்த சமாரியன் தேவனுடைய வார்த்தையிலுள்ள முதல் கொள்கைகளில் ஒன்றுக்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கிறோம். ஆனால் கற்பனைகளைக் கைக்கொள்கிறோம் என்பவர்கள் துணிகரமாய் அதை அசட்டை செய்கிறார்கள்.

சமாரியன் அந்த மனிதனின் காயங்களை விலைஉயர்ந்த பொருள்களால் (ஒலிவ) எண்ணெய் மற்றும் திராட்சரசத்தால் (தனக்கென்று கொண்டுவந்தது) கட்டியதுமல்லாமல், காயப்பட்டவனைத் தன் கழுதையின் மேல்ஏற்றி, சத்திரத்தை நோக்கி நடக்கலானான். வழிபோக்கனை வழிப்பறி செய்த கொள்ளையர்கள் அருகே எங்கேயாவது பதுங்கி இருந்து, இன்னொருவனைக் கழுதையிலேற்றி மெதுவாக நடந்துவரும் சமாரியனைத் தாக்கியிருக்கலாம். சரித்திரபூர்வமாக சொல்லப்படுவது யாதெனில், அக்காலத்தில் எருசலேமிற்கும் எரிகோவிற்கும் இடையில் ஒரே ஒரு ரோமச்சத்திரம் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இப்படி நடைப்பயணம் செய்து இருவரும் சத்திரத்தை அடைந்தார்கள். இரவில் தூங்கியெழுந்த சமாரியன், செலவான தொகையை யெல்லாம் கட்டி, காயப்பட்ட அந்நியனுக்கு இனிமேல் ஏற்படும் செலவையும் கட்டப் பணம் கொடுத்தான். நம்மில் எத்தனைபேர், நம் சகோதரனுக்குக் கூட இதே போல் செய்வோம்? ஒருவருக்குத் தேவையிருக்கும்போது திரும்பக் கொடுப்பார்கள் என எதிர்பாராது அதிக தாராளமாய் கொடுக்கிறோமா? நம்மையே கொடுக்கிறோமா?

## பிறனாக யார் இருந்தான்?

இறுதியில் நம் ஆண்டவர் தாம் முதலில் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்படி இளைஞனைக் கேட்டார். ஆனால் அவன் கேட்டு முடித்த உவமை தந்த வெளிச்சத்தில் அவன் பதில் இருக்க வேண்டும். “கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்?” *(லூக்கா 10:36)* அந்த இளைஞன் என்ன சொல்லியிருக்கக் கூடும்? நாம் என்ன

சொல்லக்கூடும்? முன்பு, பிறன் என்ற வார்த்தைக்கு இளைஞன் போட்ட குறுகிய வட்டத்திற்குள் அமையும் பிறனைத் தன்னைப் போல் நேசிக்க எந்தத் தடையும் இருக்காது. திட்டமாக சமாரியனைத் தன் பிறன் என்று கருதியிருக்க மாட்டான். ஆனால் இப்பொழுதோ உவமையின் சக்தியும் விவாத தத்துவமும் சமாரியனைப் பிறன் என்று ஒத்துக்கொள்ளச் செய்தது. உண்மையில் நம் பிறன் தான் யார்?

யூதன் 'பிறன்' என்றால் உறவினன் என்று பொருள் கொள்ளுவான். ஆகவே, இயேசுவுக்குப் பதில் தரும்போது 'சமாரியன்' என்ற வார்த்தையை உச்சரிக்குமளவிற்குக்கூட அவனால் இறங்கி வரமுடியவில்லை. அதற்குப் பதில் வார்த்தைகளை விழுங்கியவாறே இளைஞன் மறைமுகமாகப் பதிலளித்தான். 'அதற்கு அவன் அவனுக்கு இரக்கஞ்செய்தவனே என்றான்' *(லூக்கா 10:37).*

### தேவனில் விசுவாசத்தைத் தூண்டுதல்

# ஒழுங்கு செய்யாத பொருத்தங்கள்

பேராசிரியர் ஜே.ஜே.ப்லன்ட் பற்றி கேள்விப்பட்டவர்கள் மிகச் சிலரே இருக்கக்கூடும். அவர் மாணாக்கனாக இருந்த கல்லூரி நாட்களில் இங்கிலாந்தின் சிறந்த மாணவர்களில் ஒருவனாக இருந்தார். பின்பு கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் மார்க பேராசிரியராக ஆத்மீகம் பிரிவில் பணிபுரிந்தவர். 1847ல் தமது ஆராய்ச்சியின் தொகுப்புகளைக் கோர்த்து ஒரு நூலை வெளியிட்டார். அதில் வேதாகமத்தில் வெவ்வேறு பகுதிகளைத் தெரிந்தெடுத்து அந்த நூல்களின் நடுவே "ஒழுங்கு செய்யாத பொருத்தங்கள்" இருப்பதை நிரூபித்தார்.

**ராட்சதர் எச்சரிக்கை**

அவருடைய அணுகு முறைக்கு ஒரு நல்ல உதாரணம், பேராசிரியர் ப்லன்ட் மூன்று வேதபகுதிகளைத் தெரிந்தெடுத்தார். எண்ணாகமம் 13:3, யோசுவா 11:21,22 மற்றும் 1 சாமுவேல் 17:4. இந்த வேத பகுதிகள் மூன்று வெவ்வேறு ஆசிரியர்களால் மூன்று வெவ்வேறு காலத்தில் தெரிந்தெடுக்கப்பட்டது.

- முதலாவது வேதபகுதியில், இஸ்ரவேலர் வாக்குத்தத்த பூமியைச் சுதந்தரிக்கும்படி உள்ளே பிரவேசிக்கு முன்பே திரளான ராட்சதர்கள் இருந்தனர் என்று கூறுகிறது. இந்த ராட்சதர்களை "ஆனேக்கின் புத்திரர்" அல்லது 'ஆனேக்கீம்' (எபிரேயு மொழியில் 'ஆனெக்' என்ற பதத்தின் பன்மையாகும்) என்றழைத்தார்கள்.
- இரண்டாம் வேதபகுதியில் இஸ்ரவேலர் வாக்குத்தத்த பூமியைச் சுதந்தரித்த போது, ஏறக்குறைய இந்த ஆனேக்கியரை அழித்துப் போட்டனர். ஆனால் அவர்களில் சிலர் மூன்று பட்டணங்களில் வசிக்கும்படி விட்டுவிட்டனர். அந்தப் பட்டணங்களின் பெயர்கள் காசா, காத் மற்றும் அஷ்தோத்.
- மூன்றாம் வேதபகுதி கோலியாத் என்ற ராட்சதனின் சொந்த ஊர் காத் பட்டணம் என்ற தகவல் தருகிறது.



இந்த மூன்றாம் ஆசிரியர் ஏதாவது கற்பனை கதாசிரியர் போல முன்னால் கூறப்பட்ட வேத ஆசிரியர்களை முறியடிப்பது போல எதையாவது திரித்து எழுதிவிட்டாரா அல்லது அந்த ராட்சதனின் சொந்த ஊரைக் கண்டுபிடித்து எழுதினாரா? அல்லது மேற்கூறப்பட்ட மூன்று பட்டணங்களில் ஒன்றைத் தெரிந்தெடுத்து எழுதினாரா? அப்படி எதுவும் இல்லை. இந்த மூன்று வேதபகுதிகளிலும் ஒன்றையொன்று பின்னிபிணைந்த உண்மை அடங்கியுள்ளது. அவை ஒன்றோடொன்று மிகவும் நன்றாகப் பொருந்துகின்றன. ஏனெனில் அவை திட்டமிட்டு எழுதப்படாததும் ஒழுங்கு செய்யாத உண்மைகளுமாகும்.

**அகித்தோப்பேலின் துரோகம்**

தனது நூலின் மற்றொரு பகுதியில் திரு. ப்லன்ட் வேதாகமத்தில் ஒன்றுக்கொன்று சம்மந்தப்படாத வேதபகுதிகளை ஒன்று கூட்டி, அபாரமான விளைவுகளைக் கொணருகிறார். தாவீது ராஜாவின் பிற்கால வாழ்க்கையில் துக்ககரமான இரு பெரும் சம்பவங்கள் நடைபெற்றதை நீங்கள் ஏற்கனவே அறிந்திருக்கலாம். முதல் சம்பவம், தாவீது உரியாவின் மனைவியான பத்சேபாளைக் கற்பழிப்பு செய்த குற்றத்துடன், அவளது உண்மையான கணவனை யுத்தமுனையில் கொலை செய்ததாகும். இரண்டாம் சம்பவம், தாவீதின் சொந்த மகனான அப்சலோம் தனது தகப்பனுக்கு விரோதமாக எழும்பி, தற்காலிகமாக சிங்காசனம் ஏறினான். இதனால் தாவீதும் அவனோடிருந்தவர்களும் தற்காலிக நாடோடிகளாக வெளியேறினர். உள்நாட்டு கலவரம் வெடித்தது.

இங்கு கூறப்பட்ட இரண்டாம் சம்பவமான தாவீதின் முதல் சம்பவமாகிய பத்சேபாள் உரியாவின் எதிரொலியாகத் தேவன் கொடுத்ததண்டனை என்று வேதாகமம் கூறுகிறது. ஆனால் இதில் மனித தொடர்பு இருந்ததாக வேதம் கூறாமல் விளக்கமுடியாத ஒரு சம்பவத்தைக் கொண்டு அதைத் தெளிவுப்படுத்துகிறது.

இங்குள்ள வேதவசனம் பின்வரும் சந்தர்ப்பத்தைக் குறிக்காமல் ஒரு விளக்கம் கொடுக்கிறது.

''அப்சலோம் பலிகளைச் செலுத்தும்போது, தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேல் என்னும் கீலோனியனையும் அவன்ஊராகிய கீலோவிலிருந்து வரவழைப்பித்தான். அப்படியே கட்டுபாடு பலத்து, ஜனங்கள் அப்சலோமினிடத்தில் திரளாய் வந்து கூடினார்கள்'' *(2. சாமுவேல 15:12)*

அப்சலோம் எதிர்த்து நிற்கும்படி தீர்மானித்தபோது, தன்னோடு சேரும்படி கீலோ ஊரானாகிய அகித்தோப்பேலுக்குச் சொல்லி அனுப்பினான் என்று இந்த வசனம் கூறுகிறது. அது மட்டுமில்லாமல் அவன் செய்தது ஆச்சரியத்துக்குரியதாக இருந்தது. ஏனெனில் தாவீதின் 'வலது கரம் போல' நம்பத்தக்க ஆலோசனை

காரனாக இருந்தான். அவன் ராஜாவுக்கு நல் ஆலோசனை வழங்குகிறவன் எனப்பெயர் பெற்றிருந்தான். ஆனால், ஏதோ காரணத்துக்காக, அகித்தோப்பேல் கட்சி மாறுவான் என்று அப்சலோம் தெளிவாக அறிந்திருந்தான். அந்தக் காரணம் என்ன ?

## ஆச்சரியமான பொருத்தம்

அதன் விடையானது, தாவீது ராஜாவோடே உத்தியோகம் பார்த்து வந்த சிலருடைய பெயர் பட்டியலின் மூலம் கிடைக்கிறது. உதாரணமாக :

''மகாத்தியனின் குமாரனாகிய அகஸ்பாயிம் மகன் எலிப்பெலேத், கீலோனியனாகிய அகித்தோப்பேலின் குமாரன் எலியாம் என்பவன் ஏத்தியனாகிய உரியா என்பவர்களே, ஆக முப்பத்தேழு பேர்" *(2. சாமுவேல் 23:34,39).*

அந்தப் பெயர் பட்டியலை உற்று நோக்கினால், தாவீதின் முக்கிய 37 மெய்க்காவலர்களில் இரு முக்கிய பெயர்களைக் காணலாம் :

ஏத்தியனாகிய உரியா (தாவீது கொலை செய்வித்தவன்), மற்றும்

கீலோனியனாகிய அகித்தோப்பேலின் குமாரன் எலியாம் - கலகக்காரனான அத்கிதோப்பேலின் மகன். எனவே தாவீது நம்பியிருந்த ஆலோசனைக்காரனின் மகனும், கொலை செய்யப்பட்டவனும் சக ஊழியர்கள் ஒருவேளை நண்பர்களாக இருந்திருக்கலாம். அது மாத்திரமல்ல. பத்சேபாள் யாரென்று அவளை நன்றாய் விசாரித்தறியும்படி தாவீது சொல்லியனுப்பியத்தில் அவனுக்குக் கிடைத்த தகவலின் விவரம் பின்வருமாறு :

"அப்பொழுது தாவீது, அந்த ஸ்திரீ யாரென்று விசாரிக்க ஆள் அனுப்பினான். அவள் எலியாமின் குமாரத்தியும், ஏத்தியான உரியாவின் மனைவியுமாகிய பத்சேபாள் என்றார்கள்" *(2. சாமுவேல் 11:3)*

இப்போது முக்கியமான தகவல் கிடைத்துவிட்டதல்லவா ? முழுவதும் வேறு பட்ட புஸ்தகமாகிய 1.சாமுவேல் என்ற நூலிலிருந்து, கொன்று போடப்பட்டவனுடைய மனைவியான பத்சேபாள், எலியாமின் மகள் என்று நாம் படிக்கிறோம். இதன் மூலம், உரியா தன்னுடன் பணிபுரிந்த சக ஊழியரின் மகளைத் திருமணம் செய்திருக்கிறான் என்று தெரியவருகிறது. இந்த உண்மைகளைக் கொண்டு, இப்போது, ஏன் அப்சலோம் அகித்தோப்பேலின் உதவியைக் கலகம் பண்ணும்படி பெற்றான் என்றும், அதைக்கண்டு தாவீது ஆச்சரியமடைந்ததும் தெளிவாகிறது.

தாவீது ஏமாற்றின இளம் பெண் அகித்தோப்பேலுக்கு பேத்தி முறைமை ஆகும். தாவீது கொன்ற இளைஞன் திருமண உறவின்படி அகித்தோப்பேலுக்கு பேரன் ஆவான். காதலும் காமமும் கொண்ட தாவீது குருட்டாட்டமாக செயல் பட்டதால், அகித்தோப்பேலிடமிருந்து அது எந்தவிதமான பாதிப்பைக்கொண்டு வரும் என்பதைக் காணத்தவறி விட்டான். ஆனால் அகித்தோப்பேல் தன் மனத்துக்குள் குமுறிக்கொண்டிருந்ததும் பழிவாங்க சமயம்



தேடிக்கொண்டிருந்ததும் அப்சலோம் குறிப்பாக அறிந்து வைத்திருந்தான்.

## பொதுவில் அவமானம்

அந்த அகித்தோப்பேலின் கலகத்தின் மூலம் இன்னும் கூடுதலான விளைவுகள் நடக்கவிருந்தன. முதன் முதலாக தாவீது பத்சேபாளைக் கண்டபோது, அரண்மனை உப்பரிகையின் மேல் உலாவிக் கொண்டிருக்கையில், ஸ்நானம் பண்ணுகிற ஒரு ஸ்திரீயை உப்பரிகையின் மேலிருந்து கண்டான் என்று *(2. சாமுவேல் 11:2)* வாசிக்கிறோம். அந்த காரியத்தை அகித்தோப்பேல் தாவீதின் அவமானத்துக்காக திருப்பி செய்வித்தான். தாவீதின் மறுமனையாட்டிகளோடு ஊர் கவனம் வாங்கி, ஊர் பார்க்க, அவமானப்படுத்தும் நோக்கத்துடன் அப்சலோமைச் சயனிக்கச் செய்தான். அதன் மூலம் தகப்பனுக்கும் மகனுக்கும் நடுவில் மன்னிக்க முடியாத ஒரு பிளவை ஏற்படுத்தி, அவ்வாறு பழிதீர்த்துக் கொண்டான்.

ஆதலால் இந்த அதிசயமான கதையில் மறைந்திருக்கும் கதை தெரிந்தறிந்து எழுதப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்று கூறலாம். மேலும் இந்த சம்பவங்களெல்லாம் ஒன்றுக்கொன்று கோர்த்து எழுதப்படவும் இல்லை. ஆனால் அவையனைத்தும் சரித்திரத்தில் பொருந்தி நடைபெற்றுள்ளன. ஆதலால் மிகவும் பொருத்தமுள்ளவைகளாக உள்ளன.

## மேலும் திரளானவை

பேராசிரியர் ப்லன்டின் நூலில் இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான பொருத்தங்கள் எழுத்தப்பட்டுள்ளன. பிற நூல்களும் அவ்வாறே கூறுகின்றன. நீங்கள் தெரிந்துக்கொள்ள விரும்பும் எந்த கதையை எடுத்தாலும் தேவையான அளவு பொருத்தங்களைத் தேடலாம். ஆனால் உங்களால் முடியாது. ஏனெனில் அவைகள் உண்மையான சரித்திர சான்றுகளாக இருக்கிற படியால் அவைகளை மர்ம நாவல்களுடன் ஒப்பிட்டு எதிர்பார்க்கமுடியாது.

பரிசுத்த வேதாகமம் 66 புத்தகங்களால் கூட்டப்பட்டு, 40 ஆசிரியர்களால் எழுதப்பட்டு, ஏறக்குறைய 1000 ஆண்டுகால இடைவெளிக்குள் எழுதப்பட்ட சம்பவங்களின் கோர்வை ஆகும். ஆனால் அவைகளினூடே பின்னி காணப்படுகிற பொருத்தங்கள் மிகவும் ஆச்சரியமானவை. அது வெறுமையாக சரித்திர பொருத்தமாக மட்டும் ஏற்றுக் கொள்வது சரியல்ல.

எல்லா எழுத்தாசிரியர்களுமே ஜீவனையும் மரணத்தையும் பற்றிய உபதேசங்களை அர்த்தம் மாறாமல், தேவனுக்கு விரோதமான கலகம், மனித கலக்கத்துக்கு விடையாக தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் குறித்து நீங்கள் ஆழமாக சிந்தித்து தேடும்படி உங்களுக்கென்று சில முக்கிய தலைப்புகளைத் தருகிறோம்.

F தீமைச் செய்கிறவர்களும் உதவியற்றவர்களும் எவ்வாறு தேவனற்றிருக்கிறார்கள்.

- F ஜனங்கள் தேவனுக்கு விரோதமாக கலகம் பண்ணுதலின் விளைவை எவ்வாறு திருத்த முடியும்.
- F தேவன் வழங்கும் நித்திய ஜீவனும், அந்த ஈவைப் பெற்றுக்கொள்ள நிபந்தனைகளும்
- F இந்தப் பூமியைத் தமது மகிமையால் நிரப்பத் தேவன் தரும் வாக்குத் தத்தமும், திட்டமும்.
- F தேவனுடைய அனைத்து கிரியைகளுக்கும் இயேசு கிறிஸ்து எவ்வாறு மையமாக இருக்கிறார்.

அனைத்தும் சுத்தமாகப் பொருந்துகின்றன. ஏனெனில் வேதாகம நூல்கள் சாதாரணமாக பொருத்தப்படவில்லை. தேவனுடைய வார்த்தை தெய்வீக உந்துதலால் எழுதப்பட்டது. அது தேவனிடமிருந்து வருகிறது.

- லாரன்ஸ் கேவ்

# ஞானஸ்நானம் - இது என்ன? இதன் பொருள் என்ன?

**முக்கிய குறிப்புகள் :**

ஞானஸ்நானம் எடுக்கும் முன்னதாக நாம் புரிந்து கொள்ள வேண்டிய ஒரு சில முக்கியமான குறிப்புகள்.

ஞானஸ்நானத்திற்கான 'பாப்டிசோ' என்ற கிரேக்க வார்த்தையின் பொருள். முழுவதும் நனைத்து விடு - வேறு வார்த்தைகளில் சொல்லப்போனால் தண்ணீரினுள் மொத்தமாக மூழ்கடித்தல்.

- விசுவாசித்து மனந்திரும்பிய வயது வந்தவர்கள் தான் வேதாகமத்தில் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள்.
- குழந்தைகளோ அல்லது பிள்ளைகளோ இல்லை.
- ஞானஸ்நானம் என்பது இரட்சிப்புக்கு மிகவும் இன்றியமையாதது என்று இயேசு சொல்கிறார் இது தனிப்பட்டவர்களுடைய விருப்பத்திற்கு விடப்பட்ட உபரியான ஒன்று அல்ல.
- ஞானஸ்நானமானது தேவனால் கட்டளையிடப் பட்டது ஆகவே ஒருமுறை விசுவாசித்த பின்னர் ஞானஸ்நானம் செய்யப்படுவதற்கு மறுத்தாலோ அல்லது அதனை ஒத்திப்போடுவதோ தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமலிருப்பதாகும்.
- உண்மையான ஞானஸ்நானமானது பாவங்களின் மன்னிப்பு நிகழ காரணமாயிருக்கிறது.



**அப்போஸ்தலர் புத்தகம்**

| எடுத்துக்காட்டு | விசுவாசித் தார்கள் | மனந்திரும்பி னார்கள் | அறிக்கை யிட்டான் | ஞானஸ்நானம் பெற்றார்கள் |
|---|---|---|---|---|
| 3000 பேர் | 2:37,41 | 2:38 | | 2:41 |
| சமாரியர்கள் | 8:12 | | | 8:12 |
| சீமோன் | 8:13 | | | 8:13 |
| மந்திரி | 8:37 | | 8:37 | 8:38 |
| பவுல் | 22:8,10 | 22:10 | 22:10 | 22:16 |
| கொர்நெலியு | | | | 10:48 |
| லீதியா | 16:14 | | | 16:15 |
| சிறைச்சாலைக்காரன் | 16:31 | 16:30 | | 16:33 |
| கொரிந்தியர்கள் | 18:8 | | | 18:8 |
| எபேசியர்கள் | 19:2 | | | 19:5 |

**விசுவாசமும் ஞானஸ்நானமும்**

சரியான விசுவாசத்தின் முக்கியத்துவம் பற்றி ஏற்கனவே அழுத்திக் கூறியுள்ளோம். அது ஞானஸ்நானத்தோடு சேர்ந்து செல்கிறது. ஒரு போலியான நற்செய்தியை விசுவாசித்துக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதினால் ஒரு பயனும் இல்லை. நற்செய்தியை முழுமையாய் புரிந்து கொள்ளாமல் ஞானஸ்நானம் பெற்றவர்கள் சத்தியத்தை அறிந்த போது மறுபடியும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்ற எடுத்துக்காட்டுகள் வேதாகமத்தில் உண்டு *(அப்போஸ்தலர் 19 ஆம் அதிகாரம்)* ஆகவே நாம் ஞானஸ்நானம் பண்ணப்படும் முன்பு மெய்யான நற்செய்தியினை நாம் விசுவாசிக்க வேண்டும்.



ஞானஸ்நானத்தின் முக்கியமானது அப்போஸ்தலர் நடபடிகளில் தெளிவாக்கப்பட்டுள்ளது. உலகம் எங்கும் நற்செய்தி பரவியதை அடிப்படையானதாக

அப்போஸ்தலர் நடபடிகள் அறிக்கை செய்கின்றது. இதில் முற்றிலும் தெளிவாக இருப்பது என்ன வென்றால் உண்மையாக விசுவாசித்த அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். விசுவாசித்து மனந்திரும்பி, இயேசுவை பின்பற்றுவதற்கு அவர்கள் விரும்புகிறார்கள் என்பதை அறிக்கையிட்டு விதிவிலக்கின்றி அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று மேல் உள்ள பட்டியல் காண்பிக்கின்றது. ஞானஸ்நானத்திற்குக் கீழ்படிந்த அனைவரும் மெய்யாக பின்பற்றுவோர்கள் என்று கருதப்பட்டனர். அது இரட்சிப்புக்கு இன்றியமையாதது என்று அவர்கள் அறிவார்கள். இயேசு சொன்னபடி : "ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்" *(யோவான் 3:5)*. தேவ ராஜ்யத்தில் நுழைவதற்காக ஒருவன் ஜலத்தினால் பிறக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை இங்கே இயேசு தெளிவு படுத்துகின்றார். இயேசு தொடர்ந்து வலியுறுத்திக் கூறுகின்றார் "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்". *(மாற்கு 16:16)* அதில் மட்டுமே விசுவாசமாயிருப்பது போதாது என்று இந்த வசனம் தெளிவாக காட்டுகின்றது. இரட்சிக்கப்படும்படியாக நாம் ஞானஸ்நானம் பணண்ணப்படவேண்டும். இன்னும் உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் இருக்குமானால் அல்லது உண்மையில் நாம் ஞானஸ்நானம் பண்ணப்பட தேவன் விரும்பவில்லை என்று எண்ணுவீர்களானால் மத்தேயு 3ஆம் அதிகாரத்தை பாருங்கள்.



அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடைசெய்து, நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக : இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். *(மத்தேயு 3:13-15)*



இயேசு தாமே ஞானஸ்நானம் பண்ணப்பட்டார். ஆகவே நாம் அவரை பின்பற்ற விரும்புவோமெனில் நாமும் இதை செய்தாக வேண்டும். இதைச் செய்யும்படி தேவன் நமக்குக் கட்டளை இடுகிறார் என்று கூட நம்மிடம் பலன் விளையும்படி கூறுகிறார். இப்படி தேவன் கேட்கிற எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாக இருக்கிறது தேவன் நிபந்தனையில்லாமல் கேட்கும் ஞானஸ்நானம் என்பது ஒரு விசுவாச செயலாக இருக்கிறது.

### கீழ்ப்படிதலின் செயல்

ஞானஸ்நானம் என்பது தேவனிடத்தில் கொண்ட நமது கீழ்படிதலை காண்பிக்கிறது. நாம் பாவிகள் என்பதை ஒப்புக்கொள்கிறோம் என்பதை இது காட்டுவதோடு, நாம் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது நமது பாவங்களை தேவன் மன்னிப்பார் என்று அறிகிறோம். இது ஒரு வல்லமையான அடையாளமாகவுங்கூட இருக்கிறது.

"கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோமர் 6:3,4).

ஆகவே ஞானஸ்நானம் பண்ணப்படும் தண்ணீருக்கு உள்ளே போகும் போது சிலுவையில் இயேசுவுடன் மரித்ததற்கு ஒப்பாக இருக்கிறது. நமது பாவங்களுக்காக இயேசு மரித்தார் மேலும் நாம் இயேசுவின் மரணத்தோடு நம்மை இணைத்துக்கொள்ளும் போது அவருடைய பலியினாலே பாவங்களுக்கான மன்னிப்பு நமக்கு வழங்கப்படுகின்றது. இந்த அடையாளமான / மாதிரியான மரணத்தின் மூலமாக பழைய மனிதனை அழித்து 'புதிய சிருஷ்டியாக' எழும்புகிறோம்.

ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை எங்களது வார்த்தைகளை வைத்து நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. உங்களது வேதாகமத்தை எடுத்து படிக்கத்துவங்கி இதைத்தான் உண்மையில் இது சொல்கிறதா என்று சரிபார்த்துக்கொள்ளுங்கள். நாங்கள் சொல்வது உட்பட அனைத்தையும் வேதாகமத்தை வைத்து சோதித்துப் பாருங்கள். தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம் மட்டுமே அதிகாரப்பூர்வமானது. வேதாகமத்தை நாமே படித்துக்கொண்டு ஒரு மகிழ்ச்சி மிகுந்த வாழ்வுக்கான வழியைக் கண்டு கொள்ளுங்கள். தவறிவிட்டு விடாதீர்கள்.

**- சாரா மற்றும் ஆன்டி ஜாய்னர்**